அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 20/2023

எனது இலக்கம் : MPA/HD/8/NP/GAM/ALOCATION
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2023.09.20

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் நில பியச வீடமைப்புத் தொகுதிக்கு தகுதிபெற்ற உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டுதல்கள்</u>**

இந்த அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்ற உள்ள கம்பஹா மாவட்டத்தின் நில பியச வீடமைப்புத் தொகுதியில் தற்போதுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களை ஒதுக்கிக்கொள்வதற்காக விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வது தொடர்பிலான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்த இந்த அமைச்சு தீர்மானித்துள்ளது.

02. இந்த வருடம் செப்டெம்பர் 20 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையில், பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே பொது நிர்வாக அமைச்சின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் உள்ள பொதுச் சேவை உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பு உள்ளது.

i. 2016.02.25 ஆந்திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 (சம்பளத் திருத்தம் ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிறைவேற்றுத் தரத்திலுள்ள பதவியொன்றை வகிக்கின்ற முனைப்பான சேவையில் உள்ள அரச உத்தியோகத்தராக இருத்தல்
ii. கொழும்பு அல்லது கம்பஹா மாவட்டத்தில் உள்ள சேவை நிலையமொன்றில் கடமையாற்றுதல்.
iii. விண்ணப்பம் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்ல உரித்தினைக்கொண்ட பதவியொன்றினை வகிக்காமை

iv. விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர் அல்லது அவரது துணையின் பெயரில் ஒதுக்கப்பட்டுள்ள அரசின் உத்தியோகபூர்வ இல்லமொன்று இல்லாதிருத்தல்

v. விண்ணப்பதாரர் அல்லது அவரது துணை இருவரும் அரச உத்தியோகத்தர்களாக இருக்கும்போது இல்லத்துக்கு விண்ணப்பிக்க முடிவது ஒருவருக்கு மாத்திரமே.

vi. சேவை நிலையத்திலிருந்து நிரந்தரமாக வசிக்கும் இடத்துக்கு (வாக்காளர் பதிவுத் தகவலின்படி) கூகுள் வரைபடம் (Google map) மூலம் அளத்தல் மேற்கொள்ளப்பட்டு பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆகாய தூரம் 20 கி.மீ இலும் அதிகமாக இருத்தல்

03. அதன்படி, அரசின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு விண்ணப்பிக்க எதிர்பார்க்கும் நிறைவற்று உத்தியோகத்தர்களுக்கு தேவையான ஆவணங்கள் இணைப்பு 01 மற்றும் இணைப்பு 02 இல் வழங்கப்பட்டுள்ளன.

இணைப்பு 01 - கம்பஹா மாவட்டத்தில் அரச பொது சேவை உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்கு பொருத்தமான நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான அறிவுறுத்தல்களின் தொடர்

இணைப்பு 02 - உத்தியோகபூர்வ இல்ல விண்ணப்பப்டிவம்

04. இணைப்பு 02 இல் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பம் விண்ணப்பதாரர்களின் முன் அறிந்து கொள்ளலுக்காக மட்டுமே. இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் தொடரில் இலக்கம் 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நிகழ்நிலை முறையில் மட்டுமே விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் வன் பிரதி (hard copy) 16.10.2023க்கு முன்னர் அமைச்சின் இரண்டாவது மாடியில் அமைந்துள்ள வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவில் ஒப்படைக்கப்பட ஆவன செய்தல் வேண்டும்.

06. இச்சட்டத்தில் சிங்களம் மற்றும் தமிழ்மொழி வாசகங்களில் ஏதேனும் பொருத்தமின்மை ஏற்படின் அதன்போது சிங்களமொழி வாசகமே செல்லுபடியாக வேண்டும்.

ஒப்பம்./ கே.டி.என்.ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு
தொலைபேசி : 011-2695738
மின்னஞ்சல் : pubad.secretary@sltnet.lk

**பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**<u>பொது நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் நில பியஸ வீடமைப்புத் தொகுதிக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தல்</u>**

பொது நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் நில பியஸ வீடமைப்புத் தொகுதிக்குரிய உத்தயோகபூர்வ இல்லங்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் இந்த அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படி விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி 2023 ஒக்டோபர் மாதம் 15 ஆந்திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>கம்பஹா நில பியஸ இல்லங்களுக்கான விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல் தொடர்பான ஏற்பாடுகள் மற்றும் அறிவுரைக்கோவை</u>**

1.0. கம்பஹா நில பியஸ வீடமைப்புத் திட்டத்தில் 20 இல்ல அலகுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்த முன்னர் கீழ்வரும் ஏற்பாடுகள் மற்றும் தகவல்களை கவனமாக ஆராய வேண்டும்.

**2.0. அடிப்படைத் தகைமைகள்**

2.1 அரசியலமைப்பில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளவாறு அரச உத்தியோகத்தராக இருத்தல்.மேலும், அந்த அரச உத்தியோகத்தர் 2016.02.25 ஆந்திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016 (சம்பளத் திருத்தம்)

நிறைவேற்றுத் தரத்திலுள்ள பதவியொன்றை வகிக்கின்ற முனைப்புடனான சேவையில் உள்ள அரச உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

2.2 கொழும்பு அல்லது கம்பஹா மாவட்டத்துக்குட்பட்ட சேவை நிலையமொன்றில் பணி புரிதல்

2.3 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் போது அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்ல உரித்துக் கொண்ட பதவியொன்றை வகிக்காதிருத்தல்

2.4 விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பதாரரது துணையின் பெயரில் ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லமொன்று இல்லாதிருத்தல்

2.5 விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பதாரரது துணை ஆகிய இருவரும் அரச உத்தியோகத்தர்களாக இருக்குபோது ஒருவர் மாத்திரமே இல்லங்களுக்கு விண்ணப்பிக்க முடியும் .

2.6 சேவை நிலையத்தில் இருந்து நிரந்தர வதிவிடத்துக்கு (வாக்காளர் பதிவுத் தகவல்களின் படி) கூகுள் வரைபடம் (Google map) மூலம் அளத்தல் மேற்கொள்ளப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும் ஆகாய தூரம் 20 km ஐ விட அதிகரித்தல்

2.7 இல்லங்களை விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரது சேவை நிலையத்துக்குரிய திணைக்களம் அல்லது அமைச்சிடம் அரசின் உத்தியோகபூர்வ வீடமைப்புத் திட்டங்கள் இருக்கக் கூடாது

2.8 2023 ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் 15 ஆந் திகதியில் அரசின் எந்தவொரு உத்தயோகபூர்வ இல்லங்கள் தொடர்பிலும் நிலுவையில் உள்ள வாடகை இல்லாதிருத்தல்

2.9 1985 இலக்கம் : 45, 1981 இலக்கம் : 08, 1974 இலக்கம் : 40 மற்றும் 1971 இலக்கம் : 03 திருத்தப்பட்ட சட்டங்களின் திருத்தப்பட்ட 1969 இலக்கம் : 07 கொண்ட அரச இல்லங்கள் (உடைமைகளை மீளப்பெறல்) சட்டத்தின் 3 ஆம் இலக்கப் பிரிவின் கீழ் வழக்குக் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக இல்லாதிருத்தல்

2.10 சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை உண்மைத் தன்மை அற்ற , சட்டவிரோதமான ஆவணம் அல்லது ஆவணங்கள் என கண்டறியப்பட்டால், அதே காரணத்திற்காக விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

2.11 மேலே பிரிவு 2.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி ஏதேனும் தவறான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரர் மற்றும் அந்த தவறான தகவலை வழங்கிய அல்லது ஆதரவளித்த ஏனைய அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3.0 விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்:

**(விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டிய விடயங்கள்)**

3.1 நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கு, பொது நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் இணையத்தளப் பக்கத்துக்குச் சென்று (https://forms.gle/b9pWzJ1UueoB4oMG6) நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

3.2 விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் திகதியில், நிரந்தர வீட்டில் (வாக்காளர் பதிவுத் தகவலின்படி)/தற்காலிகமாக வசிக்கும் வீட்டில் இருந்து வேலைத் தளத்துக்கு ஆகாய தூரம் கூகுள் வரைபடத்தின் (Google map) உதவியுடன் அளவிடப்பட்டு விண்ணப்பப்படிவ இலக்கம் 07 (ii) மற்றும் 08 (ii) குறித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு 05 மாதங்களுக்கு முன்னரான காலத்தில் விண்ணப்பதாரரின் அல்லது துணையின் பெயரில் அவ்வீட்டின் நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி கட்டணப்பத்திரம் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். துணையின் பெயரில் அந்த கட்டணப்பத்திரம் இருந்தால்,

விண்ணப்பப்படிவத்துடன் திருமணச் சான்றிதழையும் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

3.3 விண்ணப்பதாரர், தற்போதைய நிறைவேற்றுத் தரத்தில் நியமனம் பெற்ற நியமனக் கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதியையும் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

3.4 சேவைக் காலத்தில், அரசின் உத்தியோகபூர்வ இல்லத்தின் சிறப்புரிமை (தாபனவிதிக்கோவையின் XIX அத்தியாயத்தின் 1 இல் அரசின் இல்லம் பொருள் கோடல் செய்யப்பட்டுள்ளது) பெற்றிருந்தால் அது பற்றி விண்ணப்பப்பத்திர இலக்கம். 28 மற்றும் 29 இல் குறித்தல் வேண்டும்.

3.5 விண்ணப்பதாரர் அல்லது துணைக்கு நீண்ட கால நடத்தல் / பயணித்தலில் சிரமம் அல்லது வேறு ஏதேனும் கடுமையான உடற்குறைபாடு அல்லது வேறு ஏதேனும் நீண்ட கால தீவிர நோய் நிலை இருந்தால் அது பற்றியும் விண்ணப்பதாரருடன் வாழும் குழந்தைகள்/ சார்ந்திருப்பவர்களுக்கு (18 வயதுக்குட்பட்ட குழந்தைகள்) டவுன் சிண்ட்ரோம் (Down's Syndrome)/ /சிறுநீரகச் செயலிழப்பு (Renal Failure)/ முதுகுத் தண்டு கோளாறுகள் (Spinal Cord Disorders)/ தீவிரமான உடற்குறைபாடுகள் அல்லது பிற நோய்கள், காணப்படின் அது பற்றியும் விண்ணப்பப்படிவ இலக்கம் 18 A (iii) மற்றும் 18 B (ii) இல் குறிப்பிடுவதுடன், ஒரு வருட காலத்திற்குட்பட்ட மருத்துவ அறிக்கையையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும் .

**(நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய விடயங்கள்)**

3.6. விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் தினத்திலிருந்து 06 மாதங்களுக்குள் விண்ணப்பதாரரின் பதவிக்கேற்ப சேவையின் தன்மை, பொறுப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் குறித்து நிறுவனத் தலைவரால் வழங்கப்படும் எழுத்துப்பூர்வமாக உறுதியொன்று இருத்தல் கட்டாயமாகும். இந்த

எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தலும் விண்ணப்பத்துடன் கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.7. மேலே உள்ள 3.6 இல் உள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் அறிக்கையிட வேண்டும்

i. அரசின் எந்தவொரு உத்தியோகபூர்வ இல்லத்துக்கும் உரிய நிலுவை உத்தியோகபூர்வ இல்ல வாடகை காணப்படுமாயின் அதுதொடர்பான தகவல்கள் (விண்ணப்பத்தின் 23)

ii. 1985 இலக்கம் 45, 1981 இலக்கம் 08, 1974 இலக்கம் 40 மற்றும் 1971 இலக்கம் 03 திருத்தப்பட்ட சட்டங்களின் 1969 இலக்கம் 07 ஐக்கொண்ட அரசின் உத்தியோகபூர்வ இல்ல ( உடைமைகளை மீளப்பெறல்) சட்ட இலக்கம் 3 ஆம் பிரிவின் கீழ் வழக்குக் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக இருப்பின் அதுதொடர்பான தகவல்கள் ( விண்ணப்பத்தின் 24)

iii. பொதுச் சேவைக்கு வந்த பின்னர் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 14/2022 இன் ஏற்பாடுகளுக்குப் பொருந்தாதவாறு, ஊதியம் அற்ற விடுமுறை பெற்றிருப்பின் (ஊதியம் அற்ற மகப்பேற்று விடுமுறை தவிர) அது தொடர்பான தகவல்கள் (விண்ணப்பத்தின் 25)

iv. விண்ணப்பதாரர் அரசின் பொதுச் சேவை இல்ல சிறப்புரிமைகளைப் பெற்றிருப்பின் அது தொடர்பான தகவல்கள் (விண்ணப்பத்தின் 27)

v. விண்ணப்பதாரரின் அமைச்சு அல்லது திணைக்களத்தில் வேறு ஏதேனும் வீடமைப்புத்திட்டம் உள்ளதா என்பது பற்றிய தகவல்.

மேற்படி அனைத்து விடயங்களும் தனிப்பட்ட கோப்பு அல்லது பிற எழுத்து மூல ஆவணங்கள் மூலம் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு நிறுவனத் தலைவரால் உறுதிப் படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**4.0 விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நடைமுறை:**

4.1 நிகழ்நிலை விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்காக, பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் இணையதளத்தில் வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவு தொடர்பான இணையப் பக்கத்துக்குள் நுழைந்து,

(https://forms.gle/b9pWzJ1UueoB4oMG6) நிகழ்நிலை விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, விண்ணப்பதாரர் பூர்த்தி செய்ய வேண்டிய பகுதிகளை பூர்த்தி செய்த பின்னர், அவ்விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்தல் வேண்டும்.

4.2 அவ்வாறு பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பப்படிவம் தனிப்பட்ட கோப்பிலிருந்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய பகுதிகளை பூரணப்படுத்திய பின்னர், நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தலுடன் (3.6 மற்றும் 3.7 இன் படி),மேற்படி பிரிவு 3.0 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிற ஆவணங்கள் மற்றும் பிற உறுதிப்படுத்தல் ஆவணங்களும் இணைக்கப்பட்டு 2023 ஒக்டோபர் மாதம் 15 ஆந் திகதி அல்லது அத்தினத்துக்கு முன்னர் பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் வீடமைப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு வருகை தந்து அப்பிரிவில் உள்ள வீடமைப்பு விண்ணப்பப்பதிவேட்டில் கையொப்பமிட்டு ஒப்படைக்கப்பட வேண்டும்

4.3 2023 ஒக்டோபர் மாதம் 15 ஆந் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது

## 5.0 தெரிவு செய்தல் செயன்முறைகள் :

5.1 2023 ஒக்டோபர் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பங்களும் வீடமைப்புக் குழுவால் பரீட்சிக்கப்பட்டு 6.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி வழங்கல் முறையின்படி புள்ளிகள் வழங்கப்படும்.

5.2 அப்புள்ளி ஆவணம் 2023 நவம்பர் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையப் பக்கத்தில் வெளியிடப்படும்

5.3 அவ்வாறு பொது நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்ட பின்னர், இங்கு புள்ளி வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிரமாணங்களுக்காக பெற்றுள்ள புள்ளிகள் தொடர்பில் திருப்தியடையாத விண்ணப்பதாரர்களுக்கு அப் புள்ளிப் பட்டியல் வெளியிடப்படும் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் தவிசாளர், உத்தியோகபூர்வ வீடமைப்புக் குழுவிடம் மேன் முறையீடொன்றினை முன்வைக்க முடியும்.

5.4 தெரிவுசெய்தல் செயன்முறையின் கீழ், பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கில், எதிர்வரும் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ இல்ல உரித்துப் பெற்ற உத்தியோகத்தர்களது இறுதிப் பெயர்ப்பட்டியல் உத்தயோகபூர்வ வீடமைப்புக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நவம்பர் மாதம் 27 அந்திகதி அல்லது அதற்கு முன்னர் பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையப் பக்கத்தில் வெளியிடப்படும்

5.5 விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் சந்தர்பத்திலேயே, பிரிவு 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிப்படுத்தல் ஆவணங்களை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கவில்லையெனில் அவ்விடயங்களுக்காக பெற்றுக்கொள்ளவிருந்த புள்ளிகளை விண்ணப்பதாரர் இழப்பார். மேற்படி ஆவணங்களை விண்ணபத்துடன் சமர்ப்பிக்காமல் புள்ளிகளை இழந்த பின்னர் விண்ணப்பதாரரால் உறுதிப்படுத்தல் ஆவணங்கள் உத்தியோகபூர்வ வீடமைப்புக் குழுவுக்கு அல்லது பொது நிர்வாக விடயப் பொறுப்புச்செயலாளருக்கு அனுப்பப்பட்டு மேற்கொள்ளப்படும் எந்தவொரு மேன்முறையீடும் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது

5.6.மேற்படி 5.2, 5.3, 5.4 இல் தரப்பட்டுள்ள திகதிகள் முகாமைத்துக் காரணங்களால் மாற்றத்திற்குட்படலாம்.

**6.0 தெரிவுசெய்தலுக்கு பயன்படுத்தப்படும் புள்ளி வழங்கல் செயன்முறை:**

6.1 விண்ணப்பதாரர் பெறக்கூடிய அதிகபட்ச புள்ளிகளின் அளவு 50 புள்ளிகள் ஆகும்.

6.1.1. பின்வரும் பிரமாணங்களுக்கு விண்ணப்பதாருக்கு புள்ளிகள் சேர்கின்றன

i. விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திகதி வாக்காளர் பதிவுத் தகவல்களுக்கிணங்க வசிக்கும் வீட்டிலிருந்து பணிபுரியும் நிலையத்துக்கு கூகுள் வரைபடம் (Google map) மூலம் அளவிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்படும் ஆகாய தூரத்திற்குப் பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.

(a) 21km தொடக்கம் 40km வரை - 05புள்ளிகள்
(b) 41km தொடக்கம் 60km வரை - 10புள்ளிகள்
(c) 61km தொடக்கம் 80km வரை - 15புள்ளிகள்
(d) 81km க்கு அதிகம் - 20 புள்ளிகள்

(அதிகபட்ச புள்ளிகள் 20)

ii. விண்ணப்பதாரரின் பதவி உரித்தாகும் தரம்

(a) தரம் III - 10புள்ளிகள்
(b) தரம் II - 10புள்ளிகள்
(c) தரம் I - 15புள்ளிகள்
(d) விஷேட தரம் - 20புள்ளிகள்

(அதிகபட்ச புள்ளிகள் 20)

iii. விண்ணப்பதாரருடன் வாழும் குழந்தைகள்/ (18 வயதுக்குக் குறைந்த குழந்தைகள்) சார்ந்திருப்பவர்களுக்கு டவுன்ஸ் சிண்ட்ரோம் (Down's Syndrome)/ / சிறுநீரகச் செயலிழப்பு(Renal Failure)/ / முதுகுத் தண்டு கோளாறுகள் (Spinal Cord Disorders)/ /தீவிரமான உடல் குறைபாடுகள் அல்லது பிற நோய்கள் காணப்படல் (விண்ணப்பப்படிவத்துடன் மருத்துவ அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்) விண்ணப்பதாரருக்கு நடக்கவோ அல்லது பயணிக்கவோ சிரமமாக இருக்கும் வகையில் தீவிரமான உடற் குறைபாடு இருத்தல். (விண்ணப்பப்படிவத்துடன் மருத்துவ அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்) வாழ்க்கைத்துணைக்கு கடுமையான உடற்குறைபாடு காணப்படல் (விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் விண்ணப்பத்துடன் மேற்படி விடயங்கள் குறித்த மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் கட்டாயமாகும்.)

(அதிகபட்ச புள்ளிகள் 04)

iv. 18 வயதுக்குட்பட்ட மகன்கள் மற்றும் திருமணமாகாத மகள்களுக்கு ஒரு குழந்தைக்கு 01 புள்ளி வீதம் வழங்கப்படும்.

(அதிகபட்ச புள்ளிகள் 06)

6.1.2. பின்வரும் பிரமாணங்களுக்கு விண்ணப்பதாரது புள்ளிகள் கழிக்கப்படும்..

i. பொதுச் சேவையில் 05 வருடங்கள் முந்தைய சேவைக்காலத்தில், (ஊதியமற்ற மகப்பேற்று விடுமுறை தவிர), எடுத்திருந்தால், அதில் 05 நாட்களுக்கும் குறைவாக ஊதியமற்ற விடுமுறை எடுத்திருந்தால் 05 புள்ளிகளும், 05 நாட்களுக்கு அதிகமாக ஊதியமற்ற விடுமுறை எடுத்திருந்தால் 10 புள்ளிகளும் கழிக்கப்படும்.

(அதிகபட்சம் 10 மறைப் புள்ளிகள்)

ii. விண்ணப்பிக்கும் திகதிக்கு முந்தைய 05 வருட காலத்திற்குள், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு, கோட்டை, தெஹிவளை நகர எல்லைகளிலும், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா, மினுவாங்கொட, அத்தனகல்ல, கட்டான, ஜா-அல, வத்தளை, ராகம, களனி, பேலியகொட , பியகம, மஹர, தொம்பே நகர எல்லைகளிலும் காணப்படும் அரசின் பொதுச் சேவைகள் வீட்டுச் சிறப்புரிமையைப் பெற்றிருந்தால் பின்வருமாறு புள்ளிகள் கழிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (a) | 01 வருடம் வரை | - | 02புள்ளிகள் |
| (b) | 01வருடஙகளுக்கு அதிகம் - 02 வருடங்கள் வரை | - | 04புள்ளிகள் |
| (c) | 02வருடஙகளுக்கு அதிகம் -03 வருடங்கள் வரை | - | 06புள்ளிகள் |
| (d) | 03வருடஙகளுக்கு அதிகம்-04வருடங்கள் வரை | - | 08புள்ளிகள் |
| (e) | 04வருடஙகளுக்கு அதிகம் - 05வருடஙகளுக்கு குறைவு | - | 10புள்ளிகள் |

(அதிகபட்சம் 10 மறைப் புள்ளிகள்)

iii. விண்ணப்பதாரரின் வாழ்க்கைத் துணையின் பெயரில் விண்ணப்பிக்கும் திகதிக்கு முந்தைய 05 வருட காலத்திற்குள், கொழும்பு மாவட்டத்தில், கொழும்பு, கோட்டை, தெஹிவளை நகர எல்லைகளிலும், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா, மினுவாங்கொட, அத்தனகல்ல, கட்டான, ஜா-அல, வத்தளை, ராகம, களனி, பேலியகொட , பியகம, மஹர, தொம்பே நகர எல்லைகளிலும் காணப்படும் அரசின் பொதுச் சேவைகள் வீட்டுச் சிறப்புரிமையைப் பெற்றிருந்தால் பின்வருமாறு புள்ளிகள் கழிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (a) | 01 வருடம் வரை | - | 02புள்ளிகள் |
| (b) | 01வருடஙகளுக்கு அதிகம் - 02 வருடங்கள் வரை | - | 04புள்ளிகள் |
| (c) | 02வருடஙகளுக்கு அதிகம் -03 வருடங்கள் வரை | - | 06புள்ளிகள் |
| (d) | 03வருடஙகளுக்கு அதிகம்-04வருடங்கள் வரை | - | 08புள்ளிகள் |
| (e) | 04வருடஙகளுக்கு அதிகம் - 05வருடஙகளுக்கு | - | 10புள்ளிகள் |

| | | | |
|---|---|---|---|
| | குறைவு | | |

(அதிகபட்சம் 10 மறைப் புள்ளிகள்)

iv. விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு பயனாளி நிறுவனத்தில் (விருப்பமான சேவை நிலைமொன்றில்) பணி புரியும் ஒரு உத்தியோகத்தராக இருத்தல்

(அதிகபட்சம் 10 மறைப் புள்ளிகள்)

6.1.3 பல உத்தியோகத்தர்கள் சமமான புள்ளிகள் பெறும் சந்தர்ப்பங்களில், சேவைமூப்புக்கேற்ப தீர்மானம் எடுக்கப்படும்.

6.2 இந்த புள்ளி வழங்கும் செயன்முறை தாபனவிதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளது

**8.0** இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பான இறுதி முடிவும் பொது நிர்வாக விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரிடமே உள்ளது.

**செயலாளர்**

**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்**

**உள்ளூராட்சி அமைச்சு.**